28.11.2023

அ.வ.எண். 1071/17 மற்றும் 160/21 மற்றும்8/2021

வாசா.1 -வசந்தி

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1071 என்ற வழக்கு நான் அதிலுள்ள 1 முதல் 5 பிரதிவாதிகள் என்னுடைய சொத்தில் மோசடி செய்து பத்திரம் ஏற்படுத்தி விட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 160/21 மற்றும் 8/21 என்ற வழக்குகள் மோசடியாக சக்திகுமார் என்கிற விஜயராகவன் தனபால் ஆகியோர் உயில் ஆவணம் ஏற்படுத்தி பத்திரம் தயாரித்துள்ளதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு 1995 ல் திருமணம் ஆனது. அதற்கு முன்பாக வழக்கு சொத்து பொறுத்து நடந்த ஆவணங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். நான் 1 ம் வாதியின் மனைவி எனது உறவினரைதான் திருமணம் செய்துள்ளேன். நான் மேற்படி திருமணத்திற்கு முன்பு நடந்த ஆவணங்களில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை.

நான் இந்த வழக்கில் நான் தரப்பினர் இல்லை. மேற்படி 3 வழக்குகளிலும் மோசடியான பத்திரங்களை பொறுத்து தான் பரிகாரம் கேட்டுள்ளேன். வேறு பரிகாரம் கேட்கவில்லை. தாவா சர்வே எண் 614 ல் மொத்த விஸ்தீரணம் 16 ஏக்கர். என்னுடைய வழக்கு படி வாதிகள் வழக்கு சொத்திற்கு உரிமையாளர்கள் என்றும், பிரதிவாதி வழக்கு படி பிரதிவாதிகள் தான் வழக்கு சொத்திற்கு உரிமையாளர்கள் என்று வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் ஆதியில் வழக்கு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பெரிய கவுண்டரின் வாரிசு பற்றி விவரங்கள் எனக்கு தெரியும். அவருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரியல்ல. ஒரே மனைவி தான்.

பெரிய மாரப்ப கவுண்டரின் மகன் பெயரி ராமசாமி அவர் எனது மாமனார். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆங்கிலம் எனக்கு படிக்க தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். எனது மாமனார் கந்தசாமி, ராக்கியாகவுண்டர், ரங்கசாமிகவுண்டர், பழனியம்மாள், லட்சுமியம்மாள், ஆறுசாமிகவுண்டர் ஆகியோர் மீது திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் 108/2005 என்ற வழக்கு தாக்கல்

செய்தார் என்றும் அதன் வாதுரை நகல் தான் என்னிடம் காட்டப்பட்டுள்ளது என்றால் வழக்கு தாக்கல் செய்தது எனக்கு தெரியாது. என்னுடைய மாமனார் ராமசாமி மேற்படி வழக்குரையில் பெரிய கவுண்டருக்கு 2 மனைவிகள் என்று சொல்லியுள்ளார் அதை மறைக்கவே தற்போது இந்த வழக்குரையை ஒப்புக்கொள்ள மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி வழக்குரையில் பெரிய கவுண்டருக்கு முதல் மனைவி மூலம் பிறந்த குழந்தை பெரிய மாரப்ப கவுண்டர் எனவும், 2 வது மனைவி மூலம் பிறந்த குழந்தை சின்ன மாரப்ப கவுண்டர் எனவும் எனது மாமனாா ராமசாமி சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. பெரிய கவுண்டரின் 2 வது மனைவி மூலம் பிறந்த குழந்தைகள் தான் மாரப்ப கவுண்டர் மற்றும் தேவனகவுண்டர் என்றால் எனக்கு தெரிந்த வரையில் இல்லை. மேற்படி மாரப்ப கவுண்டருக்கு மாரப்ப கவுண்டர் ,ராமாத்தாள் ,பெரியக்காள் ஆகியோர் மக்கள் என்றால் எனக்கு தெரிந்த வரையில் இல்லை.

மேற்படி மாரப்ப கவுண்டருக்கு ராக்கியன்னன், பழனியம்மாள், ரங்கசாமி, கந்தசாமி, லட்சுமி, ஆறுச்சாமி ஆகியோர் மக்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி மாரப்ப கவுண்டர் மகன் கந்தசாமியின் மகன் தான் அசல் வழக்கு 160/21 ல் உள்ள சக்திகுமார் என்கிற விஜயராகவன் என்றால் சரியல்ல. அவரது தகப்பனார் கந்தசாமி என்று எனக்கு தெரியும், ஆனால் மாரப்ப கவுண்டர் வகையரா என்று எனக்கு தெரியாது. கந்த சாமியின் உடன்பிறந்த சகோதரர் ரங்கசாமி என்பது எனக்கு தெரியும். ரங்கசாமியின் மனைவிதான் சுந்தராம்பாள் அவர் 1071 வழக்கில் 3 ம் பிரதிவாதி.

மேற்படி ரங்கசாமி சுந்தராம்பாளின் மகன் தான் தனபால் அவர் அசல் வழக்கு 8/21 மற்றும் 160/21 ன் பிரதிவாதி என்றால் சரிதான். தனபால் இறந்துவிட்டார். ஆதியில் வழக்கு சொத்துகள் சின்னப்பதேவர் பாத்தியம் என்றால் ஒருவருக்கு மட்டுமல்ல பல நபர்களுக்கு பாத்தியம் அவர்களது பெயர் என்ன என்றால் பத்திரத்தை பார்த்தால்தான் சொல்லத் தெரியும். சின்னப்பதேவரின் மக்கள் சபரிமுத்து தேவர், சவுந்தரதேவர், அந்தோணிதேவர், சக்கரைத்தேவர், ஆகியோருக்குதான் சொத்து பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி 4 மக்களும் தலா 4 ஏக்கர் என மொத்த விஸ்தீரனம் 16 ஏக்கரை பிரித்துகொண்டனர் எனக்கு

தெரியாது. அந்தோணி தேவர், அவரது வாரிசுகளான சவரிமுத்து தேவர் சின்னப்பதேவரை விட்டு விட்டு இறந்து விட்டார் என்றால் எனக்கு தெரியாது.

எனது மாமனாரின் தகப்பனார் பெரியமாரப்பன் மற்றும் ராக்கியாகவுண்டர் சேர்ந்து சக்கரைத்தேவரிடம் வாசாஆ 2ன் கீழ் 4 ஏக்கர் 1914ம் ஆண்டு கிரயம் பெற்றனர் என்றால் சரிதான். வாசாஆ 3ம் அடிப்படையில் எனது மாமனாரின் தகப்பனார் பெரியமாரப்பன் மற்றும் ராக்கியாகவுண்டர் சேர்ந்து சந்தோஷ்தேவர் என்பவரிடம் 4 ஏக்கர் கிரயம் பெற்றனர் என்றால் சரிதான். என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை என்னுடைய வழக்கறிஞரிடம் சொன்னது நான் தான். எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது மாமனாரின் தகப்பனாரை மாரப்பன் என்கின்ற பெரிய மாரப்பன் என்றுதான் அழைப்பார்கள் என்று சொல்லியுள்ளேன்.

வாசாஆ 2 மற்றும் 3ல் அவரது பெயர் பெரியமாரப்பன் என்கிற மாரப்பன் என பெயர் எழுதப்பட்டுள்ளதா என்றால் பெரியாகவுண்டர் மகன் பெரிய மாரப்ப கவுண்டர் என்று தான் எழுதப்பட்டுள்ளது. வாசாஆ 3ல் பெரியாகவுண்டர் மகன் பெ.மாரப்ப கவுண்டர் என்று தான் எழுதப்பட்டுள்ளது. பெரிய மாரப்ப கவுண்டர் பெயர் பெரிய மாரப்ப கவுண்டர் என்கிற மாரப்பன் என நிரூபணம் செய்ய நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். வாரிசு சான்றிதழ்,இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். வாசாஆ 26 பெரிய மாரப்ப கவுண்டரின் இறப்பு சான்றிதழ் அதில் பெரிய மாரப்ப கவுண்டர் என்கிற மாரப்ப கவுண்டர் என்று எழுதப்பட்டுள்ளது.

அவர் 1945ல் இறந்தார் தேதி சரியாக நினைவில்லை. அவர் செகுடந்தாளியில் உள்ள வீட்டில் இறந்தார். அவரது இறப்பு செகுடந்தாளி பஞ்சாயத்தில் பதிவாகியுள்ளது. செகுடந்தாளி கிராமம் 1945ல் பல்லடம் வட்டத்தில் கட்டுப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பொதுவாக இறப்பு சான்றிதழ் எந்த கிராமத்தில் இறந்தார்களோ அந்த கிராமம் கட்டுப்பட்ட சார்பதிவாளர் அலுவலகம் அல்லது வட்டாட்சியர் அலுவலகத்தில் தான் பதிவு செய்யப்படும் என்றால் எனக்கு தெரியாது. பெரிய மாரப்பன் கோயமுத்தூர் நகராட்சியில் இறந்ததாக 1951ல் வாசாஆ 26ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம், எனது மாமனார் வாங்கி வைத்திருந்தார்.

பெரியமாரப்பன் இறப்பு எப்பொழுது பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. எனது மாமனாரின் தகப்பனார் இறக்கும் பொழுது எனது மாமனாருக்கு 14 வயதுதான். வாசாஆ 26 13.11.1951 ல் வழங்கப்பட்ட சான்றிதழ் தான். இறப்பு சான்றிதழ் வாங்க கொடுக்கப்பட்ட மனு நகல் எங்கள் வசம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. 1951 ல் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழில் 1969 ஆண்டில் இயற்றப்பட்ட பிறப்பு இறப்பு பதிவேடு சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டதாக வாசாஆ 26 ல் எழுதப்பட்டுள்ளது என்றும் எனவே வாசாஆ 26 என்னால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.பெரிய மாரப்பன் என்பரை மாரப்பன் என்றும் அழைப்பார்கள் என்று நிரூபணம் செய்ய எங்கள் தரப்பில் தயார் செய்யப்பட்ட போலியான ஆவணம் தான் வாசாஆ 26 என்றால் சரியல்ல. நாங்கள் போலியான ஆவணங்களை வைத்து வழக்கு தாக்கல் செய்து நடத்திவருகிறேன் என்றும் பிரதிவாதிகள் அவ்வாறு போலிஆவணங்கள் தயார் செய்துள்ளதாக வழக்கில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/ வசந்தி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

N RENUGA

Digitally signed by N RENUGA
Date: 2023.11.28 16:59:50 +0530

District Munsif,

Sulur.